ஸ்ரீ:



ஸ்ரீஹேமாப்ஜநாயிகா ஸமேத ஸ்ரீதேவாதிராஜ பரப்ரும்ஹணே நம:|
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:||

# ஸ்ரீ செங்கமலவல்லித் தாயார் ஸமேத
# ஸ்ரீ ஆமருவியப்பன் திருக்கோயில்

தேரழுந்தூர் (நாகை மாவட்டம்) – 609808

## ஜீர்ணோத்தாரண, புனராவர்த்தன, அஷ்டபந்தன
# மஹாஸம்ப்ரோக்ஷண பத்திரிகை

நாள்: வைகாசி 10 (24-5-2010) திங்கட்கிழமை



## ஸ்ரீ கோஸக பக்த ஸபா
தேரழுந்தூர்



ஸ்ரீ செங்கமலவல்லித் தாயார்



ஸ்ரீதேவி பூதேவி ஸமேத ஸ்ரீஆமருவியப்பன்



**ஸ்ரீ செங்கமலவல்லித் தாயார் ஸமேத ஸ்ரீ ஆமருவியப்பன் திருக்கோயில்**

தேரழுந்தூர்

# மஹாஸம்ப்ரோக்ஷண பத்திரிகை

**க்ருஷ்ணாரண்யே ஜகத்யாம் உபரிசரவஸோ: ஸ்யந்தனம் யத்ர மக்னம்**
**தஸ்மிந் தேவாதிராஜ: ஸதத ஸஹசரி ரக்த பத்மா பிதாநாம்**
**தீர்த்தம் தர்ஶப்ரஸித்தம் கலிமலஹரணம் காருடம் தத்விமாநம்**
**காவேரி கும்பஜாப்யாம் உபரிசரவஸோ ப்ராந்முக ஸுப்ரஸந்ந:**

செங்கமலத் திருமகளும் புவியும் செம்பொன் திருவடியி னிணைவருட முனிவ ரேத்த,
வங்கமலி தடங்கடலுள் அனந்த னென்னும் வரியரவி னணைத்துயின்ற மாயோன் காண்மின்,
எங்குமலி நிறைபுகழ் நால் வேதம் ஐந்து வேள்விகளும் கேள்விகளும் இயன்ற தன்மை,
அங்கமலத்து அயனனையார் பயிலும் செல்வத்து அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே

திருவுக்கும் திருவாகிய செல்வா! தெய்வத் துக்கரசே! செய்ய கண்ணா,
உருவச் செஞ்சுடராழி வல்லானே! உலகுண்ட ஒருவா! திரு மார்பா!
ஒருவற்கு ஆற்றி உய்யும் வகை என்றால் உடல் நின்று ஐவர் என் உட்புகுந்து, ஒழியாது
அருவித் தின்றிட அஞ்சி நின் னடைந்தேன் அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே!

தேமருவு பொழிலிடத்து மலர்ந்த போதைத் தேனதனை வாய்மடுத்துன் பெடையும் நீயும்,
பூமருவி இனிதமர்ந்து பொறியி லார்ந்த அறுகால சிறுவண்டே! தொழுதேன் உன்னை,
ஆமருவி நிரைமேய்த்த அமரர் கோமான் அணியழுந்தூர் நின்றானுக்கு இன்றே சென்று,
நீமருவி அஞ்சாதே 'நின்றோர் மாது நின் நயந்தாள்', என்றிறையே இயம்பிக் காணே.

–திருமங்கையாழ்வார்

ஸ்ரீய: பதியாய், அவாப்த ஸமஸ்த காமனாய், அனந்த கருட விஷ்வக்ஸேனாதி ஸேவ்யமானராய், உபயவிபூதி நாயகராய், ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான், **ஆவாரார் துணையென்று அலை நீர்க்கடலுள் அழுந்தும் நாவாய்போல** பிறவிக்கடலுள் நின்று சுழல்கின்ற சேதனர்களை, **பொய்ந்நின்ற ஞானமும், பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பும் இந்நின்றநீர்மை இனியுறாது, ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்து** வாழலாம்படி உஜ்ஜீவிப்பிக்கத் திருவுள்ளம் கொண்டு, இந்த லீலாவிபூதியில் அர்ச்சாரூபியாய் எழுந்தருளியிருக்கும் திவ்யதேசங்கள் பலவற்றுள், '**ஸ்ரீமத் தார்ஷ்யவிமான மத்ய தடே ஸ்ரீக்ருஷ்ண புர்யாம் ஸ்திதம்**' என்றபடி உபரிசரவஸ் மஹாராஜாவுக்கு ப்ரத்யக்ஷமாய் தை அமாவாசையில் ஸேவை ஸாதித்ததோடு, கருடன், ப்ரஹ்லாதன்,

மார்க்கண்டேயர், காவிரித்தாயார் இவர்களோடு தேரழுந்தூர் (திருஅழுந்தூர்) திவ்ய தேசத்தில் எழுந்தருளியிருப்பது யாவரும் அறிந்ததே!

தேனுடைக்கமலத் திருவுக்கும் திருவாகிய தேவாதிராஜனை, அறிவுதரும் பெரிய திருமொழியில் நாற்பது பாசுரங்களால், மங்களாசாஸனம் செய்தும் ஆற்றாமல், ஆமருவியப்பனின் வடிவழகில் மயங்கிய மங்கைமன்னன் திருநெடுந்தாண்டகத்தில், தூது விடும் நாயகியாய், **"என்னைவிட்டுப் போனவர் என்பிரிவு தாங்கப் பொறுக்காது அரங்கத்தளவும் செல்லமாட்டாதவராய், தேரழுந்தூரிலே நின்றிருப்பர். அங்குப் போய் ஓர்மாது நின்னயந்தாள் எனக்கூறுங்கோள்"** என்று திருவுள்ளமாகித் திருப்பாசுரம் அமைத்தமையை வேறெங்குக் காண இயலும்?

ஒப்பற்ற இந்த திவ்யதேசத்து எம்பெருமான் கோஸகன், வடிவழகில் ஆழ்வார் மட்டுமன்றி பல்வேறு மஹனீயர்களும் மயங்கி, செந்தமிழும், வடகலையும் திகழ்ந்த நாவராய், அனவரதமும் மண்டிக்கிடந்தார்கள். நம் முன்னோர்களின் அடியொற்றி, இத்திருக்கோயிலில் **தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை** மான்யத்துடனும் மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினால் அங்கீகரிக்கப்பட்ட **ஸ்ரீகோஸக பக்த ஸபாவின்** மூலம் பல்வேறு கைங்கரிய சீலர்களின் **உபயதாரர்** (Donor) **திருப்பணியாக** திருக்குளம், ராஜகோபுரம், வஸந்த மண்டபம், வாஹனமண்டபம், தாயார் ஸன்னதி மண்டபம், திருமடப்பள்ளி துவஜஸ்தம்பம் (கொடி மரம்) முதலான திருப்பணிகளை முழுமையாகப் புதுப்பித்தும், திருமதில்கள், விமான வண்ணப்பூச்சு உள் மற்றும் வெளிப் ப்ராஹார தரை தளம் முதலிய பல்வேறு திருப்பணிகளைச் செய்வித்தும், தனது திருக்கோயிலை மேலும் பொலிவுற திருப்பணிகளை நடத்திக் கொண்டுள்ளான் ஸ்ரீ ஆமருவியப்பன்.

ஆழ்வார், ஆசார்யர்கள் **ஐந்து வேள்விகளும் கேள்விகளும் இயன்ற தன்மையர்களால்** மங்களாசாஸனம் செய்யப்பெற்ற, ஸ்ரீ ஆமருவியப்பன் எழுந்தருளியிருக்கும் 'ஸ்ரீகாருடவிமானம்' உள்ளிட்ட விமானங்கள், இராஜகோபுரம் உள்ளிட்ட ஸ்ரீ ஆமருவியப்பனின் திருக்கோயிலின் இதர ஸன்னதிகளின் மஹாஸம்ப்ரோக்ஷணம், ஸ்ரீசெங்கமல வல்லித்தாயார் ஸமேத ஸ்ரீ ஆமருவியப்பனின் கிருபையையும், **ஸ்ரீமத் அஹோபிலமடம், ஸ்ரீமத் அழகிய சிங்கர்கள் மற்றும் ஸ்ரீரங்கம் பெரியாஸ்ரமம் ஸ்ரீமதாண்டவன்** நியமனத்தையும் அவலம்பித்தும் **நிகழும் விக்ருதி வருடம், வைகாசி மாதம் 10 ஆம் நாள் (24.5.2010) திங்கட்கிழமை ஹஸ்த நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில்** காலை 9.00 மணிக்குமேல் 10.30 மணிக்குள் ஸிம்ஹ லக்னத்தில் நிகழ்த்திடவும்

நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி மஹாஸம்ப்ரோக்ஷணம் **ஸ்ரீமத் அஹோபிலமடம் 45வது பட்டம் அழகியசிங்கர் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி** பிருதாலங்க்ருத **ஸ்ரீலஷ்மி ந்ருஸிம்ஹ திவ்யபாதுகா ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேசிகன் மற்றும் 46ம் பட்டம் ஸ்ரீமத்அழகியசிங்கர் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாத யதீந்த்ர மஹாதேசிகன்** அத்யக்ஷத்தில் நடக்க இருக்கிறது. மேற்படி மஹா ஸம்ப்ரோக்ஷணத்தில் ஆஸ்திகர்கள் அனைவரும் ஆரம்பமுதல் பூர்த்திவரை இருந்து ஸேவித்து கைங்கர்யங்களிலும் யதாசக்தி அன்வயித்து **ஸ்ரீசெங்கமலவல்லித் தாயார் ஸமேத ஆமருவியப்பனின்** பரிபூர்ண அனுக்ரஹத்தைப் பெறவேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ கோஸக பக்த ஸபா
திருப்பணிக்குழு
**T.P. ரங்கநாதன்**
தலைவர்
**N. ரங்கராஜன்**
உபதலைவர்
**A. தேவநாதன்**
செயலர் மற்றும் பொருளர்

**ப. மணவழகன்** M.Sc., M.Ed.,
செயல் அலுவலர்
அருள்மிகு ஆமருவியப்பன் திருக்கோயில்
அறங்காவலர் குழு
**தங்க ரவீந்திரன்** (தலைவர்)
**S. கலிய பெருமாள்**
**S. ஹேமலதா**
**N. ஆமருவிப்பிள்ளை**
**P. இளங்கோவன்**

---

தேரழுந்தூர்
09-04-2010

*அனைவரும் வருக! அருள் பெறுக!!*

---

மேற்படி மஹா ஸம்ப்ரோக்ஷணத்தில் கலந்து கொள்ள
விரும்புவோர் அணுகவேண்டிய முகவரி
**ஸ்ரீ கோஸக பக்த ஸபா,**
ஸன்னதித் தெரு, தேரழுந்தூர்-609 808.
✆ : 04364-237111, Mobile : 9789926529, 9444908634

# நிகழ்ச்சி நிரல்

| | தமிழ் தேதி | நேரம் | நிகழ்ச்சி விவரம் |
|---|---|---|---|
| 16-5-201<br>ஞாயிறு | வைகாசி 2 | காலை 7 மணி | அனுக்ஞை – உத்தமோத்தம பக்ஷ பாலிகா பூஜை ஆரம்பம் |
| -5-2010<br>வெள்ளி | வைகாசி 7 | காலை 9 மணி | மூலவர், உத்ஸவர், பூர்வாங்க திருமஞ்சனம். |
| | | மாலை 6 மணி | அனுக்ஞை, விஷ்வக்ஸேனாராதனம். சேனை முதல்வர் புறப்பாடு, ம்ருத்ஸங்க்ரஹணம், அங்குரார்ப்பணம், வேத, ப்ரபந்த, இதிகாச, புராண, பாராயண தொடக்கம். |
| | | இரவு 9 மணி | திக்பந்தனம். |
| -5-2010<br>சனி | வைகாசி 8 | காலை 6 மணி | கஜேந்த்ர தீர்த்த கடங்கள் புறப்பாடு, ரக்ஷாபந்தனம், கலாகர்ஷணம் பெருமாள், கும்பங்கள் யாகசாலை ப்ரவேசம், கடஸ்தாபனம். அக்னிப்ரதிஷ்டை – கும்ப, பிம்ப, அக்னி. மண்டல, சதுஸ்தான திருவாராதனம். |
| | | பகல் 12 | ஹோமம், பூர்ணாஹுதி சாற்றுமுறை. |
| | | மாலை 6 மணி | விமான கலசங்கள் அதிவாஸ |
| | | மாலை 7 மணி | இரண்டாம் கால சதுஸ்தான திருவாராதனம், பூர்ணாஹுதி – சாற்றுமுறை. |
| 201<br>ஞாயிறு | வைகாசி 9 | காலை 8 மணி | மூன்றாம் கால சதுஸ்தான திருவாராதனம். |
| | | காலை 10 | மூலவர், ஸ்நபன திருமஞ்சனம். |
| | | பகல் 12 | பூர்ணாஹுதி சாற்றுமுறை. |
| | | மாலை 4 மணி | உத்ஸவர், 473-கலச கர்மாங்க ஸ்நபன |
| | | மாலை 6 மணி | நான்காம் கால சதுஸ்தான திருவாராதனம். |
| | | மாலை 8 மணி | பூர்ணாஹுதி சாற்றுமுறை. |
| | | மாலை 9 மணி | சயனாதி வாஸம், வீணை ஏகாந்தம். |

| | | | |
|---|---|---|---|
| **24-5-2010** திங்கள் | வைகாசி 10 | காலை 6 மணி | ஸுப்ரபாதம், விஸ்வரூபம், ஐந்தாம் கால சதுஸ்தான திருவாராதனம். சாந்தி ஹோமங்கள், மஹாபூர்ணாஹுதி, யாத்ராதானம், க்ரஹப்ரீதி. |
| | | காலை 9 மணி | **திருமங்கையாழ்வார் திருக்கோயில் ஸம்ப்ரோக்ஷணம்.** |
| | | காலை 9.30 மணி | பெருமாள் தாயார், கடங்கள் புறப்பாடு. |
| | | காலை 10.20 மணிக்கு | **விமானங்கள் மஹாஸம்ப்ரோக்ஷணம்.** |
| | | காலை 10.30 மணிக்கு | **பெருமாள் ஸம்ப்ரோக்ஷணம்** சாற்றுமுறை |
| | | மாலை 6 மணி | தாயார் **நூதன வெள்ளி கமல வாஹனத்தில்** பெரிய ப்ராகார புறப்பாடு. |
| | | இரவு 7 மணி | பெருமாள் **கருட வாஹனம்** திருவீதி புறப்பாடு, ராமர் **ஹனுமந்த வாகனம்** திருவீதி புறப்பாடு<br>ஆண்டாள் **ஹம்ஸவாகனம்,** தேசிகர் வெள்ளித் தோளுக்கினியானில் திருவீதி புறப்பாடு. |
| | | இரவு 10 மணி | **வைகாசி ப்ரும்மோத்ஸவ - அங்குரார்ப்பணம்- தொடக்கம்.** |

யாகசாலை ஸர்வசாதகம்: பாஞ்சராத்ர ஆகம **கைங்கர்ய ஸ்ரீமான்**
**ஸ்ரீ உ.வே.சா.கண்ணன் பட்டாச்சாரியார் ஸ்வாமி**

திருமங்கையாழ்வாரால் மங்களா சாஸனம்
செய்யப் பெற்ற



பன்னுகலை நால்வேதப் பொருளையெல்லாம்
பரிமுகமாய் அருளிய எம் பரமன்



வடிவழகார்ந்த வண்தூப்புல் வள்ளல்
ஸ்வாமி நிகமாந்த மஹா தேசிகன்

Printed by **Versatile Prints & Packs,** Chennai-47. 9444812655, 9677011192